செய்தி வெளியீடு எண்:719 நாள்:14.09.2021

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள் தேசிய நெடுஞ்சாலை ஆணைய அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுடன் சாலைப்பணிகளை துரிதப்படுத்த ஆலோசனை!

---

தமிழகத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய மூலம் நடைபெறும் ஒப்பந்தப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் அலுவலர்களுடன் கலந்தாலோசனை கூட்டம் (14.9.2021) இன்று பிற்பகல் 12.30 மணியளவில் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது.

இக்கூட்டத்தில் தேசிய நெடுஞ்சாலை ஒப்பந்தாரர்களால் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நீர்வள ஆதார அமைப்புகளான வாய்க்கால், குளம், ஏரி ஆகியவற்றில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள ஏற்படும் இடர்பாடுகள் குறித்தும், சாலைப்பணிகளுக்காக மாற்றி அமைக்கப்படும் மின் உபகரணங்களுக்கு உரிய மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் அளித்தல், மின் பாதைகளை மாற்றியமைக்க ஒப்புதல் மற்றும் நடைபெற்று வரும் பணிகளை விரைவுப்படுத்துதல் ஆகியவற்றுக்கு ஆலோசனைகள் ஒப்பந்தாரர்களுக்கு வழங்கப்பட்டது. இதில், அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும் எனவும், அரசு அலுவலர்களுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்கள்.

சாலைப்பணிகளுக்கு தேவைப்படும் தடையின்மை சான்று / ஒப்புதல் அளித்தல், நில கையகப்படுத்தும் பணிகளை விரைவுப்படுத்துதல், மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடுவர் மன்ற தீர்ப்பாயத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடித்தல். மூலப்பணிகளுக்குத் தேவைப்படும் மண், கிராவல் மற்றும் ஜல்லி எடுப்பதற்கான அனுமதி அளித்தல் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள் கனிம வளம் ஆகியோர்கள் உரிய அனுமதியினை விரைந்து வழங்குவது தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டது.

சாலைப்பணிகளை விரைந்து முடிப்பதற்காக சம்மந்தப்பட்ட துறை அமைச்சர்களுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. மேலும், நேரில் சந்தித்து உரிய நடவடிக்கை எடுத்துவருவதாகவும் தெரிவித்தார்கள்.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள், மாதந்தோறும் ஆய்வுக்கூட்டம் நடத்தி பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கும்படி ஆலோசனை வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் திரு.தீரஜ்குமார் இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர், திரு.சிவாஜி மதுரை மண்டல அலுவலர், தேசிய நெடுஞ்சாலை ஆணையம், திரு.என்.சோமசேகர், சென்னை மண்டல அலுவலர், தேசிய நெடுஞ்சாலை ஆணையம், திரு.என்.பாலமுருகன், தலைமைப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணைய ஒப்பந்தாரர்கள் ஆகியோர்கள் பங்கு பெற்றார்கள்.

********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9